Lakeridge Health

மே 8, 2020




அன்புள்ள நண்பர்களே, அயலோரே,

பொதுசன மக்களிடையே தினசரி வைரஸ் உறுதிப்படுத்தப்படும் நபர்களின் எண்ணிக்கை குறைந்துவருகின்றமையுடன் COVID-19க்கெதிரான போராட்டத்தில் Durham Region டுர்றம் பிரதேசம் தொடர்ந்தும் உறுதியான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. சில நீண்ட –கால பராமரிப்பு மற்றும் கூட்டமாக வாழும் நிலைமைகளில் காணப்படும் பாரியதாக்கம் கொண்ட நோய்ப்பரவலுடன் இந்த நல்ல செய்தி சமநிலைப்பட வேண்டும். Long-Term care and Retirement homes நீண்ட –கால பராமரிப்பு மற்றும் ஓய்வுபெற்றோர் இல்லங்களில் வாழும் மக்களுக்கு ஆதரவளிக்கத் தொடர்ச்சியான தளராத கண்காணிப்பு முறைகள், சமூகத்தில் பரவலைத் தொடர்ந்து குறைக்கத் தேவைப்படுகின்றன.

**Ontario ஒன்ராறியோவின் COVID-19 திட்டத்தின் புதிய கட்டம்**
இந்த வாரம் **Ontarioவின்** COVID-19 பதிலிறுப்பில் இரண்டு முக்கிய முன்னேற்றங்கள் காணப்பட்டன.

Victoria Day விக்ரோறியா தின வாரஇறுதியின் பின்னர் வரை அவசரகால நிலைமை May மே 6ம் திகதி நீடிக்கப்பட்டுள்ளது. பொதுசன மற்றும் சமூக ஒன்றுகூடல்கள் ஐந்து நபர்களுக்கு மேற்படாது உடல்சார் (சமூக) தூரப்படுத்தலை உறுதிப்படுத்தும் வகையில் உள்ள கட்டளைகள் உட்படத் தற்போதைய அவசரகாலச் சட்டங்கள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்பதை இது குறிக்கின்றது.

அத்துடன் நிதானமாகப் பொருளாதார நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முதற்படியையும் மாகாண அரசு இவ்வாரம் எடுத்துள்ளது. தோட்ட நிலையங்கள் இவ்வார ஆரம்பத்தில் திறக்க அனுமதிக்கப்பட்டன. அத்துடன் May 11ம் திகதியிலிருந்து தெருவோர வாயில்களைக் கொண்ட "அத்தியாவசியம் – அற்ற" சில்லறைக் கடைகளும் திறக்க அனுமதிக்கப்படவுள்ளன.

ஒரு வெற்றிகரமான கட்டங்கட்டமான மீளத் திறத்தலுக்கு ஆதரவளிக்க March மார்ச் மாத நடுப்பகுதியில் பரவலைத் தடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட உத்திமுறைகளை நாம் தொடர வேண்டும்.

உங்கள் நெருங்கிய குடும்ப அங்கத்தவர்களுடன் இயலுமானளவு வீட்டிலேயே இருத்தல், உங்கள் சமூக வலையமைப்பு அங்கத்தினர்களுடன் மின்னியல் வழியாகத் தொடர்புகொள்ளல், வெளியில் செல்லும்போது உடல்சார் தூரப்படுத்தல்பற்றி மிக அவதானமாக இருத்தல் போன்றவற்றை இவை உள்ளடக்கும். உதாரணமாகப் பொதுசன போக்குவரத்து அல்லது சிறிய பலசரக்குக் கடைகளில், உடல்சார் தூரங்களைக் கடைப்பிடிக்க முடியாத சந்தர்ப்பங்களில், ஒரு மருத்துவ ரீதியிலற்ற முகக்கவசம் அல்லது வீட்டில் தயாரிக்கப்பட்ட துணி முகக்கவசம் ஒன்றைப் பொதுஇடங்களில் அணிந்துகொள்வது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு மேலதிக பாதுகாப்பை வழங்கும். மேலும் முகக்கவசங்கள், கைகழுவுதல் மற்றும் உடல்சார் தூரத்தைக்

கடைப்பிடித்தல் போன்றவற்றிற்கான ஒரு பிரதியீடு அல்ல என்பதையும் அவை COVID-19த் தடுக்கும் ஒரு மேலதிக கருவி மட்டுமே என்பதையும் தெரிந்திருப்பது அவசியமாகும்.

இந்த வசந்த காலத்தின் போது, முன்னிலை வரிசையில் மருத்துவர்கள், தாதியர்கள், ஏனையோர்கள் தேசிய அங்கீகரிப்பு நாட்கள் மற்றும் வாரங்களைக் கொண்டாடும் வேளையில், இந்தப் பாரதூரமான வைரஸின் பரவலை நிறுத்துவதற்கான எமது பங்களிப்பைச் செய்வதன் மூலம் நாம் நமது நன்றியுணர்வைக் காண்பிப்போமாக.

**COVID-19 போராட்டத்தில் முன்னணி வகிக்கும் தாதியர்கள்**
தாதியர் வாரமாக அடுத்த வாரத்தை நாம் பின்வரும் கருப்பொருளுடன் குறிக்கின்றோம் - *தாதியர்கள்: தலைமைவழிகாட்டலுக்கான ஒரு குரலாக– ஆரோக்கியமிக்க உலகிற்கான தாதியர் பராமரிப்பு.* கட்டிலினருகே, சமூகத்திலே, முடிவெடுக்கும் சந்திப்பு மேசைகளிலே, தாதியர்கள் மனுக்குலத்தின் பாரிய சவால்களை எதிர்கொள்வதற்கு உதவுகின்றனர். **COVID-19** உடனான எமது பதிலிறுப்பில் தாதியர்கள் தமது ஆரோக்கியப் பராமரிப்புச் சகாக்கள் பலருடனும் இணைந்து முன்னணி வகிக்கின்றனர்.

எமது சமூகத்திலுள்ளவர்களுக்கு மேன்மையானதும் மேலும் செயற்திறன் கொண்டதுமான குழுசார்ந்த அணுகுமுறைகளுடன் சேவை புரிந்து, பாதுகாப்புடன் கூடிய தரமான பராமரிப்பையும் ஆதரவையும் வழங்கி, எமது ஆரோக்கிய முறைமையை முன்னேற்றும் Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்திலுள்ள 2500க்கும் மேற்பட்ட தாதியருக்கு நாம் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

**நோயாளிகளுக்கும் எமது சமூகத்திற்குமான சேவைகள்**
Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையம் அவசரமற்ற சத்திரசிகிச்சைகள் மற்றும் ஏனைய சேவைகளை, அவை பாதுகாப்பாகச் செய்யப்படக்கூடியநிலைமை ஏற்பட்டதும், மாகாண அரசின் திட்டங்களுக்கமைய தீவிரமாக விரைவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்த விரைவுபடுத்தல் பல வாரங்கள் எடுக்கும் எனவும் சத்திர சிகிச்சைகளைத் திட்டமிடல் ஒரு மிகவும் கரிசனம் கொண்ட முறையிலும் செய்யப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும், COVID-19 க்கு முன்னரான சேவைமட்டங்களை அடையச் சற்றே காலமெடுக்கும் எனவும் நாம் அறிவோம். உங்களுக்கான சத்திரசிகிச்சை பற்றிய கேள்விகள் இருப்பின் சம்பந்தப்பட்ட சிகிச்சை நிலையத்துடன் தொடர்புகொண்டு கேட்பதுடன் மேலதிக தகவலுக்கு Lakeridge Health's லேக்றிச் ஆரோக்கிய நிலையத்தினது இணையத்தளத்தையும் பாருங்கள்.

COVID-19 உறுதிசெய்யப்பட்டு வீட்டிலிருக்கும் நோயாளர்கள் கண்காணிப்புகான மின்னியல்வழி நோய்ப்பிரிவை நடைமுறைப்படுத்தியும், oncology புற்றுநோய்ப்பிரிவுக்கானதும் ஏனைய நோயாளர்களின் மின்னியல் வழி வருகைகளுக்கு ஆதரவளித்தும், விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள மின்னியல் வழி Mental Health and Addictions Clinic மனநல மற்றும் அடிமைப்படுதல் சிகிச்சைநிலையம் போன்றவற்றை உள்ளடக்கியும் மின்னியல் வழிச் சேவைகளையும் நாம் விரிவுபடுத்தியுள்ளோம்.

பிக்கரிங்கிலுள்ள ஓர்சர்ட் வில்லாவில் (Orchard Villa- Pickering), ஏற்பட்ட தொற்றுப் பரவலுக்கான பதிலிறுப்பில், நீண்டகால பராமரிப்பு இல்லத்தினது குழுவினருடனும் கனேடிய ஆயுதப்படைகளுடனும் நெருங்கிய இணக்கத்தைப் பேணி தொடர்ந்து முன்னணியில் Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையம் நின்று வழிநடத்துகின்றது. அங்கு வாசிப்பவர்கள் அவர்களுக்குத் தேவையான பராமரிப்பையும் ஆதரவையும் பெறுவது மற்றும் தொற்றினை முற்றாக இல்லாதொழிப்பது என்பவற்றை உறுதிசெய்வதே எமது முதன்மையான குறிக்கோளாகும். எல்லோரும் சரியான தொற்றுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதை உறுதிசெய்தல், தனிப்பட்ட பாதுகாப்புக் கவச உபகரணங்களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதை உறுதிசெய்தல் மற்றும் பாரிய தொற்றுப் பரவல் நிர்வகிப்பின் போதான சிறந்த நடைமுறைகள் பற்றிய கற்கை மற்றும் பயிற்சியினை உறுதி செய்தல் என்பன எமது பணியின் ஒரு பகுதியாகும்.

எமது அலுவலர்களினது எண்ணிக்கை மட்டங்கள் உறுதியாக்கப்பட்டுள்ளமை பற்றியும் வருகை தர முடியாத, இனங்கானலுடன் குறிப்பிடப்பட்டுள்ள குடும்பத்தொடர்பினர்கள்

(உ-ம் சட்டபூர்வ உரிமை வழங்கப்பட்டோர் அல்லது பதிலாக முடிவுடுப்போர் - Power of Attorney or Substitute Decision-Maker), அனைவரும் அவர்களது அன்புக்குரியோரின் இன்றைய நிலைமைபற்றித் தனித்தனியான அறிவிப்புகள் கிடைக்கப்பெறும்படியும், Lakeridge Health's Patient Experience லேக்றிச் ஆரோக்கிய நிலைய நோயாளர் அனுபவக் குழுவினரால் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளனர் என்பது பற்றியும் நாம் அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

Lakeridge Health லேக்றிச் ஆரோக்கிய நிலையத்தினது இணையத்தளத்தில் Orchard Villa ஓர்சர்ட் வில்லா தொற்றுப்பரவல் பதிலிறுப்புப் பக்கத்தினைப் பார்வையிட்டு மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளுங்கள்.

**உதவுவதற்கான இரு முக்கிய வழிகள்**
குழுவினது நலம்பேண ஆதரவளிக்கக்கூடிய உபகரணங்கள், சேவைகள் அல்லது பொருட்களைத் தானம் அளிப்பதற்குத் தொடர்பு கொள்ளுங்கள் COVID19GIVING@lh.ca

www.durhamfightscovid19.ca இணையத்தளத்திற்குச் சென்று *Durham Fights COVID-19* campaign டுர்றம் கோவிட் 19 போராட்டப் பிரசாரத்திற்கு நிதிஉதவி செய்துதவுங்கள். எமது குழுக்களுக்கான பராமரிப்புப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், நோயாளர்களது அனுபவத்தை முன்னேற்றுவதற்கான மூலவளங்கள் போன்றவற்றிற்கென உங்கள் நிதிஉதவி உங்கள் உள்ளூர் மருத்துவமனைக்கு வழிப்படுத்தப்பட முடியும்.

எமது சமூகத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்காக உங்களால் முடிந்தவற்றை எல்லாம் செய்வதற்கு நன்றி. பாதுகாப்பாக இருங்கள்!
நல்லாரோக்கியத்துக்கான வாழ்த்துக்களுடன்,

Susan deRyk
Interim President and CEO
சுசன் டிரைக்
இடைக்காலத் தலைவர்,
பிரதம நிறைவேற்று அலுவலர்

Dr. Tony Stone
Chief of Staff
டாக்ரர் ரோனி ஸ்ரோன்
அலுவலர்கள் தலைவர்